## இனிமையான குழந்தைகளே! நீங்கள் இப்போது முச்சந்தியில் (திரிசங்கமம்) நின்று கொண்டிருக்கிறீர்கள், ஒருபுறம் துக்கதாமம், மற்றொருபுறம் சாந்தி தாமம் மற்றும் மூன்றாவது பக்கத்தில் சுகதாமமாகும், இப்போது நாம் எங்கு செல்ல வேண்டும் என்பதை தீர்மானியுங்கள்

கேள்வி: எந்தவொரு நிச்சயத்தின் ஆதாரத்தில் குழந்தைகளாகிய நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க முடியும்?

பதில்: முதலில் நாம் யாருடையவர்களாக ஆகியுள்ளோம் என்ற நிச்சயம் வேண்டும். பாபாவினுடையவர்களாக ஆவதற்கு எந்த வேத-சாஸ்திரங்கள் போன்ற புத்தகங்களையும் படிக்க வேண்டிய அவசியம் இல்லை. மற்றொன்று நம்முடைய குலம் அனைத்திலும் உயர்ந்த தேவதா குலம் என்ற நிச்சயம் வேண்டும் - இந்த நினைவின் மூலம் முழு சக்கரமும் நினை விற்கு வந்து விடும். பாபா மற்றும் சக்கரத்தின் நினைவில் இருக்கக் கூடியவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

பாடல்: யார் என்னை தன்னுடையவனாக மாற்றியது..........

ஓம் சாந்தி. குழந்தைகளாகிய உங்களுக்கு நாம் யாருடையவர்களாக ஆகியுள்ளோம் என்ற குஷி முதலில் வருகிறது. நாம் குருவினுடையவர்களாக ஆகியுள்ளோம் என்று சொல்ல முடியாது. நாம் தந்தையினுடையவர்களாக ஆக வேண்டும். சரீரத்தை விட்டு விட்டும் கூட பாபாவினுடையவர்களாக ஆக வேண்டும். இங்கேயும் பாபா வினுடையவர்களாக ஆக வேண்டும். வேத-சாஸ்திரம் போன்ற எதனுடைய அவசியமும் இல்லை. குழந்தை பிறந்தது என்றாலே என்னுடைய சொத்திற்கு எஜமானன் வந்து விட்டது என்று தந்தை புரிந்து கொள்கிறார். சம்மந்தத்தின் விஷயமாகும். உண்மையில் முதலிலேயே நாம் சிவபாபா வின் குழந்தைகளாக இருக்கின்றோம் என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். முதலில் நாம் ஆத்மாவாக இருக்கிறோம், பிறகு நமக்கு சரீரம் கிடைக்கிறது. உங்களுக்கு சரீரம் இருக்கிறது. இப்போது உங்களுக்கு எல்லையற்ற தந்தை கிடைத்திருக்கிறார். அவர் வந்து தன்னுடைய அறிமுகத்தைக் கொடுத்திருக்கிறார். பாபா நாங்கள் தங்களுடையவர்களாக இருக்கிறோம் வேறு எந்த சம்மந்தமும் இல்லை என்று நீங்கள் கூறுகின்றீர்கள். தந்தையின் குழந்தைகளாகி யிருக்கிறீகள். நான் ஒன்றும் குரு கிடையாது என்று இவர் (பிரம்மா) கூறுகின்றார். பலகையில் கூட பிரம்மா குமார-குமாரிகள் என்று எழுதப்பட்டிருக்கிறது என்றால் கண்டிப்பாக தந்தை இருப்பார் அல்லவா! நாங்கள் பிரம்மாகுமார-குமாரிகள் என்று எழுதுகிறீர்கள். இது உறவாகி விட்டது அல்லவா ! தாய் தந்தையின் உறவு வேண்டும். நீங்கள் தான் தாயும் தந்தையும், நாங்கள் உங்களுக்கு குழந்தைகள்..... என்று பாடுகிறார்கள். இது ஆத்மாவின் அழிவற்ற நினைவாகும். நாங்கள் தங்களுடைய குழந்தைகளாக ஆகும் போது தான் ஆஸ்தி எடுப் போம். நாம் தாய்-தந்தை யினுடையவர்களாக ஆகியுள்ளோம் என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர் கள். நாம் சிவபாபா வின் குழந்தைகள் எனும்போது கண்டிப்பாக தந்தை மற்றும் ஆஸ்தியின் நினைவு வருகிறது. உங்களுக்கு புத்தகம் போன்ற எதுவும் படிப்பிக்கப்படுவதில்லை, உங்களுக்கு நம்பிக்கை மட்டுமே ஏற்படுத்தப்படுகிறது. இப்போது பாபா வினுடையவர்களாக ஆகியுள்ளீர்கள் எனும் போது அவரை நினைவு

செய்யுங்கள்.

என்னை நினைவு செய்வதின் மூலம் நீங்கள் லஷ்மி-நாராயணனாக ஆவீர்கள் என்று பாபா கூறுகின்றார். எவ்வளவு சகஜமான விஷயமாக இருக்கிறது. பரந்த புத்தி வேண்டும் அல்லவா? வேறு எதையும் புரிய வைப்பதில்லை நாம் எப்படி 84 பிறவிகளின் சக்கரத்தில் வருகின்றோம் என்று தங்களுடைய குலத்தின் விஷயத்தை மட்டுமே கூறுகின்றார். மற்றபடி வேத-சாஸ்திரங்கள் படிப்பதிலிருந்து உங்களை விடுவிக்கின்றார். பாபாவையே நினைவு செய்து கொண்டிருக்க வேண்டும். சிருஷ்டி சக்கரம் எவ்வாறு சுற்றுகிறது? என்பதும் புத்தியில் இருக் கிறது. அதனுடைய முதல்-இடை-கடைசியை தெரிந்து கொள்வதின் மூலம் தான் நீங்கள் உயர்ந்ததிலும் உயர்ந்தவர்களாக ஆகின்றீர்கள். சொர்க்கத்திற்கு எஜமானர்களாக ஆகின்றீர்கள். உங்களை எப்போதைக்கும் மகிழ்ச்சியானவர்களாக மாற்றுகின்றேன். எவ்வளவு சகஜமான விஷயமாக இருக்கிறது. ஆனால் இருந்தாலும் மறந்து விடுகிறீர்கள். காரணம் என்ன? தாய்-தந்தையரை குழந்தைகள் ஒருபோதும் மறப்பதில்லை. தந்தை மற்றும் ஆஸ்தியை நினைவு செய்தீர்கள் என்றால் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். ஏதாவது துக்கம் ஏற்படுகிறது என்றால் சிவ பாபாவைத் தான் நினைவு செய்கிறார்கள். கண்டிப்பாக பாபா சுகம் கொடுத்திருக் கிறார். வேறு யாராவது துக்கம் கொடுக்கிறார்கள் என்றால் ஐயோ பாபா, ஐயோ பகவானே என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு பிறவியிலும் ஐயோ- ஐயோ என்று கூறி தான் வந்துள்ளீர் கள். இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு சகஜ மாகப் புரிய வைக்கின்றார். நீங்கள் ஆரோக்கியமாக இல்லாமல் இருக்கலாம், எவ்வளவு தான் வியாதி இருந்தாலும் சரி நீங்கள் சேவை செய்யலாம். வியாதியில் இருக்கும்போது ராம்-ராம் என்று சொல்லுங்கள் என்று சொல் கிறார்கள். நீங்களும் மற்றவர்கள் வியாதியில் இருக்கும்போது சிவபாபாவை நினைவு செய்யுங்கள் என்று கூறுங்கள். இதை கண்டிப்பாக மற்றவர்களுக்கு நினைவூட்ட வேண்டும். இறக்கும் தருவாயில் கூட இந்த ஞானத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கலாம். நீங்கள் பரமாத்மாவின் குழந்தைகள், அவரை நினைவு செய்யுங்கள். சிவபாபா எல்லையற்ற தந்தையாக இருக்கின்றார், அவர் தான் ஆஸ்தி அளிப்பார். சேவைக்கான ஆர்வம் இருந்தது என்றால் இறக்கும் போதும் கூட யாருக்காவது ஞானம் கொடுக்கலாம். மருத்துவமனையிலேயே உள் நோயாளியாக இருந்தாலும் வாயடைத்து போய்விடுவது கிடையாது. வாயிலிருந்து ஏதாவது வந்து கொண்டே இருக்க வேண்டும். எவ்வளவு நல்ல மனநிலை இருக்க வேண்டும். வியாதி யில் இருந்தாலும் நிறைய சேவை செய்ய முடியும். நண்பர்கள் - உறவினர்கள் வருவார்கள், அவர்களுக்கும் பரமாத்மாவின் நினைவு செய்யுங்கள் என்று சொல்லலாம். அவர் தான் அனைவரையும் பாதுகாப்பவர் ஆகையினால் சிவபாபாவை நினைவு செய்யுங்கள். அவர் ஒருவரே ஆவார். ஆஸ்தியும் அனைவருக்கும் அந்த ஒருவரிடத்திலிருந்து தான் கிடைக்கிறது. லௌகீக சம்மந்தத்தில் ஆணுக்குத் தான் ஆஸ்தி கிடைக்கிறது. 100 பிராமணர்களுக்கு மேலானவர் ஒரு கன்னி. தூய்மையானவரை தானம் கொடுக்கப்படுகிறது. கன்னியர்களாகிய நீங்கள் அனைத்திலும் தூய்மை யானவர் ஆவீர்கள், ஆகையினால் நாங்கள் கன்னியர்களை தானம் தருகிறோம் என்று சொல்கிறார்கள். அதை பெரிய தானம் என்று புரிந்து கொள்கிறார்கள். உண்மையில் அது ஒன்றும் தானம் கிடையாது. இப்போது தான் நீங்கள் தானம் செய்கிறீர்கள். நாங்கள் எங்களுடைய கன்னியாவை சிவபாபாவிற்கு

தருகிறோம், சொர்க்கத்தின் மகாராணி யாக ஆவதற்காக என்று சொல்கிறீர்கள். ஆனால் கன்னியாவும் நன்று எழுத படிக்க தெரிந்த வராக இருக்க வேண்டும், நம்முடைய தெய்வீக குலத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும், புரிய வைத்தால் உடனே புரிந்து கொள்ள வேண்டும். சேவாதாரியாக இருக்க வேண்டும். சிறிய குழந்தையை வைத்துக் கொண்டு பராமரிக்கக் கூடாது. சிவபாபா உங்களுடைய எல்லையற்ற தந்தை என்று யாருக்கும் புரிய வைப்பது மிகவும் சகஜமாகும். சித்திரம் முன்னால் இருக்கிறது. பாருங்கள், நீங்கள் அப்படிப்பட்ட சத்யுக ஆஸ்தியை அடைந்து கொண்டிருக்கிறீர்கள். இந்த லஷ்மி-நாராயணனுக்கு ஆஸ்தி எங்கிருந்து கிடைத்தது? எவ்வளவு சகஜமான விஷயமாக இருக்கிறது ஆகையினால் தான் பாபா பெரிய சித்திரங்களை கூட உருவாக்கிக் கொண்டி ருக்கிறார். இப்போது இந்த நாடகம் முடிகிறது. நாம் 84 பிறவிகளின் நடிப்பை நடித்தோம், இப்போது திரும்பி பாபாவிடம் செல்கிறோம். பிறகு புதிய உலகத்தில் வருவோம். நம்முடைய பாபா புதிய உலகத்தை படைப்பவர் ஆவார், நம்மை அதனுடைய எஜமானர்களாக மாற்று கின்றார். எல்லையற்ற தந்தையிடமிருந்து எப்போதும் சுகமாக இருப்பதற்கான ஆஸ்தி உங்களுக்கு எப்படி கிடைக்கும் என்ற வழி முறையை தங்களுக்கு கூறுகின்றோம். ஒன்று நான் ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள், ஆத்மாவாகிய நான் நடக்கின்றேன். இதனுடைய பயிற்சி நன்றாக இருக்க வேண்டும். தேக-அபிமானம் விட்டுப் போய் விட வேண்டும், தேக-அபிமானிக்கு லௌகீக சம்மந்தம் நினைவு வரும். ஆத்ம-அபிமானிக்கு பரலௌகீக தந்தை தான் நினை விற்கு வருவார். எழும் போதும் அமரும் போதும் நடக்கும் போதும் நான் ஆத்மா என்பதை புத்தியில் வைக்க வேண்டும். பாபாவின் வழிப்படி நடக்க வேண்டும். தங்களை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள் என்று சிவபாபா வழி சொல்கின்றார். கடின முயற்சி வேண்டும். சொர்க்கத்தின் எஜமானர்களாக ஆவீர்கள். ஆனால் குறைந்ததிலேயே குஷியாகி விடாதீர்கள். சொர்க்கத்திற்கு என்னவோ செல்வீர்கள். ஆனால் முழுமையாக நேரடிக் குழந்தை களாக ஆகுங்கள். யார் பாப்தாதாவையே நினைவு செய்வார்களோ அவர்களைத் தான் நேரடி குழந்தைகள் என்று சொல்லப்படுகிறது. வேறு யாராவது நினைவிற்கு வருகிறார்கள் என்றால் அவர்கள் மாற்றாந்தாய் குழந்தைகளாகி விடுகிறார்கள். நிறைய பேருக்கு இருவருமே நினைவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த தந்தை அழிவற்றவர் சொர்க்கத்தின் ஆஸ்தியை கொடுக்கக் கூடியவர் ஆவார். இதுவும் குலம் தான் அதுவும் குலமே ஆகும். அவர்களிட மிருந்து துக்கம் தான் கிடைக்கிறது. மற்றபடி அல்பகால ஒரு நொடி நேர சுகத்தின் ஆஸ்தி கிடைக்கிறது. இப்போது நாம் எந்த பக்கம் இருக்க வேண்டும் மற்றும் எந்த பக்கம் செல்ல வேண்டும்? என்பதை புத்தியின் மூலம் தீர்மானியுங்கள். பரலௌகீக தந்தையினுடையவர் களாக ஆகி நாம் ஏன் சொர்க்கத்தின் பக்கம் செல்லக் கூடாது என்று புத்தி சொல்கிறது. லௌகீக சம்மந்தத்திலிருந்து வாழ்ந்து கொண்டே இறக்க வேண்டும். பரலௌகீக தந்தையினுடையவர் களாக ஆவதின் மூலம் சொர்க்கத்திற்கு எஜமானர்களாக ஆவீர்கள். இங்கே நரகத்திற்கு எஜமானர்களாக ஆகின்றீர்கள். புத்தியை எங்கே இணைப்பது என்று ஆத்மா கேட்கிறது? நம்முடைய சாந்திதாமம், சுகதாமத்திற்கு செல்வோமா அல்லது இங்கே செல்வோமா? உண்மை யில் இங்கே செல்வோம்..... இது போல மனதில் எழவே கூடாது இங்கே பிறவி எடுக்க வேண்டியதே இல்லை. இங்கே பிறவி-பிறவிகளாக இருந்திருக்கிறோம். இப்போது நாங்கள் பரலௌகீக

தந்தையை ஒருபோதும் விடமாட்டோம்.

இங்கே குழந்தைகளாகிய நீங்கள் முன்னால் அமர்ந்துள்ளீர்கள். உங்களுடையது லௌகீக சம்மந்தம் கிடையாது. நாம் பாபாவோடு முக்திதாமம்-சாந்திதாமம் செல்ல வேண்டும் என்று புத்தி சொல்கிறது. அதிகாலையில் எழுந்து இப்படி-இப்படி எல்லாம் அமர்ந்து ஞானத்தை சிந்தனை செய்ய வேண்டும். இப்படி அமர்வதின் மூலம் மிகுந்த குஷி ஏற்படும். இப்போது எந்த பக்கம் செல்ல வேண்டும்? நரகத்தின் பக்கம் ஏன் செல்ல வேண்டும்? இந்த மாயை மிகவும் ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. இப்போது உங்களிடம் குறிக்கோள் இருக்கிறது. இப்போது நீங்கள் கரையில் இருக்கிறீர்கள், இந்த பக்கம் துக்கமோ துக்கம், அந்த பக்கம் 21 பிறவிகளுக்கு சுகம் இருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். பாபா கூறுகின்றார், என்னை நினைவு செய்யுங்கள் ஏனென்றால் என்னிடம் வரவேண்டும். மாயை உலகத்தின் பக்கம் செல்லுங்கள் என்று சொல்கிறது. எங்கே செல்வது? வழி என்னவோ கிடைத்திருக்கிறது. ஒரு பக்கம் சொர்க்கத் திற்கு செல்வதற்கான வழி, மற்றொரு பக்கம் நரகத்திற்கு செல்வதற்கான வழி. முக்கூட்டு (முச்சந்தி) இருக்கிறது அல்லவா? மூன்று தெருக்களுக்கு இடையில் முக்கூட்டு (முச்சந்தி) இருக்கிறது. இப்போது நாம் எந்த பக்கம் செல்வது? ஒரு தெரு முக்திக்கு செல்வது, ஒரு தெரு ஜீவன் முக்திக்கு செல்வது மற்றொன்று நரகத்திற்கு செல்வது. எப்படி மூன்று நதிகளின் சங்கமம் இருக்கிறதோ அது போலாகும். மூன்று தோட்டங்கள் இருக்கின்றன. ஒரு தோட்டத் தில் நாம் இருக்கிறோம். முக்கூட்டு என்ற உதாரணம் நன்றாக இருக்கிறது. இப்போது எங்கே செல்வது? நரகம் வினாசம் ஆகப்போகிறது. இங்கே நிறைய துக்கம் இருக்கிறது. இப்போது நாம் முக்கூட்டில் நிற்கிறோம். பின்னால் போக மாட்டோம்.

துக்கத்தின் தெருவிலிருந்து விடுவித்து பாபா முக்கூட்டில் நிற்க வைத்திருக்கிறார். துக்க தாமத்தின் தெருவிலிருந்து நீங்கள் பிறவி-பிறவிகளாக கடந்து வந்துள்ளீர்கள். முக்தி- ஜீவன்முக்தி பக்கம் செல்ல வேண்டும் என்று புத்தி இப்போது சொல்கிறது. எப்போதும் முக்தி தாமத்திலேயே அமரக் கூடாது. நாம் நடிப்பிலிருந்து விடுபட்டு விட வேண்டும், வரவே கூடாது என்பது கிடையாது. நடிப்பிலிருந்து விடுபட முடியாது. கண்டிப்பாக நாடகத்தின்படி வருவோம். பிறகு கொசுக்கூட்டம் போல் இறப்போம். எவ்வளவு துக்கத் தைப் பார்த்திருக்கிறோம் என்றால், அவ்வளவு சுகத்தையும் கூட பார்க்க வேண்டும். பாபா நாடகத்தில் சுமையளவை சரியாக வைத்துள்ளார், யாருடைய நடிப்பே குறைவாக இருக்கிறதோ, அவர்கள் ஓரிரு பிறவி எடுத்து விட்டு பிறகு சென்று விடுவார்கள். இப்போது நீங்கள் முக்கூட்டில் நின்று கொண்டிருக்கிறீர்கள். அது சாந்திதாமம், அது சுகதாமமாகும். ஒருவேளை சாந்திதாமம் செல்ல வேண்டும் என்றால் சாந்திதாமத்தை நினைவு செய்து கொண்டே இருங்கள். முக்தியை நினைவு செய்ய வேண்டும் அல்லவா? பின்னால் வரக் கூடியவர்கள் அதிகம் முக்திதாமத்தில் இருக்கும் காரணத் தினால் அதிகம் முக்திதாமம் தான் நினைவு வரும். உங்களுக்கு ஜீவன் முக்திதாமம் நினைவு வருகிறது. சொர்க்கத்திற்கு நாம் விரைவாகச் செல்ல வேண்டும். நாம் முக்தியில் இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். நல்லது, பாபாவை நினைவு செய்து கொண்டே இருங்கள் இதில் தான் நன்மை இருக்கிறது. நிர்வாணதாமத்தில் இருக்க விரும்புகிறார்கள், சுகதாமத்திற்கு வர விரும்புவதில்லை என்றால் இதன்மூலம்

இவர்களுடைய நடிப்பை தெரிந்து கொள்ளவில்லை என்று புரிந்து கொள்ளலாம். நீங்கள் சுகதாமத்திற்கு செல்லக் கூடியவர்கள், முக்கூட்டில் (சங்கமத்தில்) நின்று கொண்டிருக்கிறீர்கள். முயற்சி செய்கின்றீர்கள்.

மனிதர்களுக்கு உங்களுடைய உண்மையான யோகம் பிடிக்கும். நல்லது பாபாவை நினைவு செய்து கொண்டே இருங்கள். சக்கரத்தை கூட நினைவு செய்வதற்கான அவசியம் இல்லை. இந்த ஞானம் அனைத்து தர்மத்தவர்களுக்கும் ஆகும். நாடகத்தின் படி யார் எவ்வளவு பலனை எடுத்திருக்கிறார்களோ அவர்கள் தான் வந்து தங்களுடைய பதவியை அடைவார்கள் என்று புரிந்து கொள்ளப்படுகிறது. முக்திதாமத்திற்குச் செல்ல விரும்பு கின்றீர்கள் என்றால் பாபாவை நினைவு செய்யுங்கள். ஒருவேளை நாங்கள் எப்போதும் சுகத்தில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்றால் அங்கே அமைதியும் இருக்கிறது, சுகமும் இருக்கிறது. யார் எந்த பக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களோ அவர்கள் அந்த ஆஸ்தியை அடைய வேண்டும். அனைவருக்கும் முக்தி-ஜீவன்முக்தியை வழங்கும் வள்ளல் பாபா அல்லவா! ஒரிரு பிறவிகள் எடுப்பவர்களாக இருப்பார்கள் என்றால் இதிலேயே சுகத்தையும் பார்ப்பார்கள், துக்கத்தையும் பார்ப்பார்கள். கொசு வந்தது சென்றது போலாகும். அதை ஒன்றும் மதிப்பு மிக்க வாழ்க்கை என்று சொல்ல முடியாது. நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பவர்களாவீர்கள். நீங்கள் கலங்கரை விளக்காக நின்று கொண்டிருக்கிறீர்கள். இரண்டு வழிகளையும் காட்ட முடியும். முக்திதாமத்திற்கு வேண்டுமானாலும் செல்லுங்கள், அல்லது முக்தி-ஜீவன் முக்தி இரண்டை யும் நினைவு செய்யுங்கள். இதில் சாஸ்திரம் போன்றவற்றை படிக்க வேண்டிய அவசியம் இல்லை. குமாரிகளுக்கு மிகவும் சகஜமாகும் ஏனென்றால் விகாரம் எனும் படியில் ஏற வில்லை. சிறிய வயதில் படிப்பது நன்றாக இருக்கிறது ஏனென்றால் புத்தி நன்றாக இருக்கிறது. யாருடைய நினைவும் இருப்பதில்லை. நீங்கள் அனைவரும் குமாரிகள், நீங்கள் வேறு எதுவும் செய்ய வேண்டாம், படிப்பில் மட்டும் ஈடுபடுங்கள், அவ்வளவு தான், துக்கம் விலகி விடும். இந்த விஷயங்களை எல்லையற்ற தந்தை தான் புரிய வைக்கின்றார், அவர் பிறகு நம்மை சொர்க்கத்திற்கு எஜமானர்களாக மாற்றுகின்றார். நம்முடைய சித்திரம் கூட அப்படி ஆக வேண்டும். இந்த படிப்பின் மூலம் நீங்கள் தேவதையாக ஆக வேண்டும் என்று பாபா கூறுகின்றார். இப்போது இந்த விளையாட்டு முடிய வேண்டும். மனிதர்கள் காரிருளில் இருக் கிறார்கள். நீங்கள் இப்போது வெளிச்சத்தில் இருக்கின்றீர்கள். பாபா வந்து உறக்கத்திலிருந்து விழிக்க வைத் திருக்கிறார். இந்த புத்தியை, ஆத்மாவை விழிக்கச் செய்யப்படுகிறது. பாபா வந்து விழிக்க வைக்கின்றார் - விழித்துக் கொள்ளுங்கள், சுகதாமத்திற்காக முயற்சி செய்யுங் கள். யார் உங்களுடைய குலத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களோ அவர்கள் வந்து கொண்டே இருப்பார்கள், வளர்ந்து கொண்டே இருப்பார்கள். உங்களுடைய பிரஜைகள் எவ்வளவு பேர் உருவாகிறார்கள், என்று நீங்கள் கணக்கிட முடியுமா? இல்லை. சிலர் எவ்வளவு கேட்கிறார் கள், சிலர் கொஞ்சம் கேட்டு விட்டு சென்று விடுகிறார்கள். கணக்கிட முடியுமா என்ன? பெரிய மாலை, சிறிய மாலை, செல்வந்தர்கள், பிரஜைகள் எப்படி உருவாகிறார்கள், யார் ஆகிறார்கள், அவையனைத்தும் புத்தியில் இருக்கிறது. முக்கியமாக சூரியவம்ச மகாராஜா- மகாராணியாக யார் ஆவார்கள், பிறகு சந்திரவம்சத்தவர்களாக யார் ஆவார்கள், எவ்வளவு பிரஜைகள் உருவாக

வேண்டும் - இந்த விஷயங்கள் அனைத்தும் உங்களுக்கு இங்கே சொல்லப்படுகிறது. முழு மரம் அல்லது அனைத்து தர்மங்களின் சக்கரத்திற்கு இடையே எப்படி கிளைகள், இலைகள் போன்றவை வருகின்றன, இப்போது கூட இலைகள் வந்து கொண்டிருக்கின்றன. அங்கே நிராகார உலகம் ஒரேயடியாக காலியாகி விடும். பிறகு வினாசம் நடக்க வேண்டும். பெரிய சண்டையில் கோடிக்கணக்கானவர்கள் இறப்பார்கள், கணக்கி லடங்காதவர்கள். இங்கே எவ்வளவு பேர் அழிவார்கள். மிகக் குறைவானவர்களே சத்யுகத்தில் வந்து இராஜ்யம் செய் வார்கள். இப்போது எவ்வளவு மனிதர்கள் இருக்கிறார்கள். அந்தளவு உணவு கூட இல்லை.

பாபா சங்கமயுகத்தில் தான் வருகின்றார் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்துள்ளீர்கள். பாபா புரிய வைக்கின்றார் - குழந்தைகளே, சரீர நிர்வாகத்திற்காக கர்மம் செய்யத் தான் வேண்டும். ஒவ்வொரு விஷயத்திலும் வழி கேட்டுக் கொண்டே செல்லுங்கள். ஒவ்வொரு வருடைய கணக்கு வழக்கு அவரவருடையதாகும். அழிவற்ற டாக்டரிடம் ஸ்ரீமத் வாங்கிக் கொண்டே செல்லுங்கள். அனைவருக்கும் அவரவருக்கு தேவையான மருந்தை சொல்வார். இந்த உலகம் அழிந்தே விட்டது என்று புரிய வைக்கப்படுகிறது. இப்போது பாபாவை நினைவு செய்தீர்கள் என்றால் துக்கம் தூரம் போய்விடும். பாபா வந்திருப்பதே நரகத்தை வினாசம் செய்து சொர்க்கத்தை ஸ்தாபனை செய்வதற்கு ஆகும். நாங்கள் தங்களுக்கும் வழி சொல் கிறோம், உயர்ந்ததிலும் உயர்ந்தவரிடமிருந்து கிடைத்திருக்கக் கூடிய ஸ்ரீமத்தை நாங்கள் உங்களுக்கும் தருகின்றோம். பாபா கூறுகின்றார், என்னை நினைவு செய்தீர்களென்றால் நீங்கள் சொர்க்கத்திற்கு எஜமானர்களாக ஆவீர்கள். நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) சேவை செய்வதற்கு ஆர்வம் வைக்க வேண்டும். நோயுற்றிருந்தாலும் கூட பாபாவின் நினைவில் இருக்க வேண்டும் மேலும் மற்றவர்களுக்கும் கூட நினைவூட்ட வேண்டும். வாயின் மூலம் ஞானத்தை தானம் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

2) உறுதியாக நேரடிக் குழந்தைகளாக ஆக வேண்டும் அதாவது ஒரு பாபாவின் நினைவிலேயே இருக்க வேண்டும். அதிகாலையில் எழுந்து ஞானத்தை சிந்தனை செய்ய வேண்டும். வேறு எந்த நினைவும் வரக்கூடாது.

வரதானம் : தன்னுடைய சுபமான மற்றும் சக்திசாலியான பாவனைகள் மூலம் உலகத்தை மாற்றக்கூடிய விஷ்வ கல்யாணகாரி ஆகுக.

குழந்தைகளாகிய உங்களுடைய மனதில் அனைவருக்கும் நன்மை ஏற்படட்டும், ஒவ்வொரு ஆத்மாவும் அனேக பிறவிகள் சுகமானவராக ஆகட்டும், பிராப்திகளில் நிறைந்த வராக ஆகட்டும் என்ற இந்த சுபபாவனை சதா இருக்கிறது. உங்களுடைய இந்த சுபமான மற்றும் சக்திசாலியான பாவனையின் பலன் விஷ்வத்தின் ஆத்மாக்களை மாற்றிக் கொண்டு இருக் கின்றது, போகப் போக இயற்கை

முதற்கொண்டு மாறிவிடும். ஏனெனில், சங்கமயுக சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்களுக்கு நாடகத்தின் அனுசாரம் பிரத்யட்ச பலன் கிடைப் பதற்கான வரதானம் உள்ளது. ஆகையினால், உங்களுடைய சம்பந்தம் தொடர்பில் ஆத்மாக் கள் யாரெல்லாம் வருகின்றார்களோ, அவர்கள் அதே சமயத்தில் சாந்தி மற்றும் அன்பு என்ற பலனை அனுபவம் செய்கின்றார்கள்.

சுலோகன்: திரிகாலதரிசி என்ற ஸ்திதியில் நிலைத்திருந்து நிர்ணயம் செய்தீர்கள் என்றால், ஒவ்வொரு கர்மத்திலும் வெற்றி கிடைக்கும்.